# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1913/19 - 2015 මැයි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.05.07

*1913/19 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**454 ஆம் அத்தியாயமான அரச காணிகள் கட்டளைச் சட்டம்**

6 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசேட அளிப்புக்களை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களால், 2012, யூலை மாதம் 19 ஆந் திகதிய 4/10/35833 ஆம் இலக்க சாதனப்பத்திரத்தின் மூலம் அதில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் வளவு என்பவற்றை கொழும்பு 1 உலக வர்த்தக மையத்தில் இலங்கை முதலீட்டு சபைக்கு கையளிக்கப்பட்டதன் காரணமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதிய மேற்போந்த விசேட அளிப்பினை இத்தால் நீக்கி இரத்துச் செய்கின்றேன்.

மைத்திரிபால சிறிசேன,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 1,
2015, மே 07.

---

**1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, தேசிய அரசுப் பேரவையின் இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்**

22 அ ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட கட்டளையை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதி மேதகு மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டு சபைச் சட்டத்தின் 22 அ பிரிவின் (2) ஆம் உப பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 2012.05.17 ஆந் திகதிய 1758/26 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் (அதி விசேடமானது) வெளியிடப்பட்ட பாரக் கைத்தொழில்களின் பொருட்டு தாபிக்கப்பட்ட வலயமாக பிரகடனப்படுத்தும் வர்த்தமான அறிவித்தலை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

மைத்திரிபால சிறிசேன,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 1,
2015, மே 07.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.